**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.**

**PROSECUTION OF WITNESS :**

**Crlmp.No. 503/2026**

| | | | |
|---|---|---|---|
| NAME | :வேலுசாமி | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **17.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW – 2 : திரு.வேலுசாமி, க/பெ வெள்ளையன்**

**முதல் விசாரணை**

நான் பொம்மிடியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஞானசேகரன் என்ற பொறியாளர் மூலம் முத்துக்குமார் மற்றும் அழகியம்மாள் ஆகியோரிடம் என்னுடைய மகளுக்கு ஆசிரியர் வேலை வாங்கி தருவதாக கூறியதால் அதை நம்பி 2017 ஆம் ஆண்டு ஒரு நாள் முத்துக்குமார் மற்றும் அழகியம்மாள் வீட்டிற்கு சென்று ஞானசேகரன் என்ற பொறியாளர் மூலம் முதலில் ரூ.8 இலட்சம் மற்றும் அதற்கு பிறகு ரூ.8 இலசட்சம் ரூபாய் என மொத்தம் 16 இலட்சம் பணமாக கொடுத்தேன். மினிஸ்டர் கோட்டாவில் நிறைய நபர்களுக்கு வேலை வாங்கி தந்ததாக கூறி ஏமாற்றி மோசடியாக எங்களிடம் இருந்து 16 இலட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டனர். கடந்த 5 வருடங்களாக அவர் வேலையும் வாங்கித்தராமல் காசும் தராமல் ஏமாற்றியது தெரிந்த உடன் பணத்தை கேட்டு அவர்களிடம் நானும் என்னுடைய மகளும் பல முறை சென்று பணத்தை கேட்டும் அவர் தரமுடியாது என்று தகராறு செய்ததால் 2021 ஆம் ஆண்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் அளித்து மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் எங்களை அழைத்து விசாரித்தனர். அப்போது எதிரிகள் அங்கு வந்து பணத்தை மீண்டும் தருவதாக கூறி சென்றனர். அதன் பிறகும் பணம் தராததால் நீதிமன்றத்தை தனிப்புகார் அளித்துள்ளோம்.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.17 22:59:03 +0530